## இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபை - 2013

இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1998 இன் 53 ஆம் இலக்க இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 25(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் 2013 செப்தெம்பர் 02 ஆம் திகதிய 03/2013 ஆம் இலக்க இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. எவ்வாறெனினும், அதிகாரசபையால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் பிரகாரமே நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன்

நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்புகள்

அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு நியமம்

சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகையில் கிரய முறை அல்லது மீள்பெறுமதியீட்டு முறை எனும் இரு முறைகளில் ஒரு முறையை மாத்திரம் பின்பற்றப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையால் காணிகளில் ஒரு பகுதி மாத்திரம் மீள்பெறுமதியீட்டு முறைக்கு மதிப்பிடப்பட்டு கணிப்பிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பகுதி கிரய முறையில் கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையால பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டிருந்த போதிலும், மூன்று ஆண்டுகளிலோ அல்லது ஐந்து ஆண்டுகளிலோ சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நானாவித வைப்பு (ஏனைய) கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 1,903,439 தொகையான நானாவித வைப்பு (மாகாண சபை) கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 43,678,802 பெறுமதியான நடைபெறும் வேலை, குறிப்பாக இனங்காணப்பட்டு மூலதனமாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டுகளின் சீராக்கங்களான ரூபா 569,228 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்காக பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுகையில் ஏற்பட்ட தவறுகள் காரணமாக ஆண்டிற்கு உரித்தான பெறுமானத்தேய்வு அண்ணளவாக ரூபா 9.6 மில்லியன் தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படும் பின்வரும் சொத்துக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளுடன் இணங்கியிராததுடன் அவ்வேறுபாடுகளைச் சீராக்குவதற்கு நீண்ட காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | **நிதிக்கூற்றுக் களின் படியான மீதி** | **பட்டோலையின் படியான மீதி** | **வேறுபாடு** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 30,610,135 | 31,876,644 | 1,266,509 |
| உபகரணங்கள் | 41,017,438 | 41,117,235 | 99,797 |
| வாகனம் | 98,764,082 | 105,195,204 | 6,431,122 |
| கணனி | 8,715,539 | 7,433,125 | (1,282,414) |
| மீன் தாங்கி | 13,726,094 | 8,804,357 | (4,921,737) |
| மீன் தடாகம் | 215,801,277 | 220,508,738 | 4,707,461 |

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொலன்னறுவை மீன் உற்பத்தி நிலையத்திலிருந்து இரு ஆண்டுகளுக்கு மேலான காலமாக பெறவேண்டியிருந்த வாடகை

வருமானம் ரூபா 1,612,285 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செலுத்தப்பட வேண்டியிருந்த கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 6,922,220 தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீன்பிடி அடையாள அட்டைக்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 416,492 தொகையை உறுதிப்படுத்துவதற்குரிய பதிவேடு, ஆவணங்கள் மற்றும் பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நி.பி. 371(2)(இ) | உப கட்டுநிதி அது வழங்கப்படும் பணி பூர்த்தியடைந்ததை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 41 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட ரூபா 6,620,807 தொகையான முற்பணங்கள் இதன் படி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 138 | ரூபா 6,929,962 பெறுமதியான உறுதிப்படுத்தப்படாத 13 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்காகச் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தி | அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கோ அல்லது வேறு நிறுவகத்திற்கோ அமைச்சரவை அங்கீகாரமின்றி விடுவிக்கலாகாதெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக மூன்று உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டு சம்பளமாக மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 748,440 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2009 யூன் 01 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஏ/08/21 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 30(1) | ஊழியர் சம்பளத் திருத்தத்தின் போதும் மீளமைப்பின் போது புதிய தொகுயின் கீழ் உத்தியோகத்தர் சம்பள மட்டத்தில் அமர்த்தப்படுகையில் முன்னர் சேவையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களில் சிலருக்காக 9 சம்பள ஏற்றங்கள் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,099,309 பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 20,364,390 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 11,265,082 தொகையான பற்றாக்குறையில் குறைவு காணப்பட்டது. பற்றாக்குறையின் குறைவின் சதவீதமாக 55 சதவீதம் காணப்பட்டதுடன் இச் சாதகமான முரணிற்காக முக்கியமாக வருமான அதிகரிப்பு காரணமாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அதிகாரசபை அறிக்கையின் படி கடந்த 05 ஆண்டு காலத்தில் கடல் மற்றும் நன்னீர் மீன் உற்பத்தி பின்வருமாறாகக் காணப்பட்டது.

| ஆண்டு | கடல் நீர் மீன் உற்பத்தி | நன்னீர் மீன் உற்பத்தி |
|---|---|---|
| | மெ.தொன் | மெ.தொன் |
| 2009 | 293,170 | 46,560 |
| 2010 | 330,240 | 51,390 |
| 2011 | 381,260 | 59,560 |
| 2012 | 417,220 | 68,950 |
| 2013 | 445,930 | 66,910 |

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது கடல் நீர் மீன் உற்பத்தி அதிகரிப்பு 7 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் நன்னீர் மீன் உற்பத்தி 3 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 4.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது விசேட முற்பணங்கள், எரிபொருள் முற்பணம் மற்றும் சில்லறைக் காசு முற்பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 292,346 திசெம்பர் 31 இல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு கொள்வனவு முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 256,438 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) காசோலைகளின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் வங்கி மீதி போதுமானதா எனக் கொடுப்பனவு உத்தியோகத்தரால் தொடர்ந்து ஆராய்ந்தறியக் கூடிய போதிலும் அவ்வாறு ஆராய்ந்தறியாது காசோலைகள் வரையப்பட்ட காரணத்தால் ரூபா 1,932,930 பெறுமதியான காசோலைகள் மதிப்பிழந்திருந்தன.

## 4.3 பதவியணி நிர்வாகம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் வெற்றிட எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்று நிலை | 88 | 78 | 10 |
| நிறைவேற்று நிலையற்ற | 418 | 365 | 53 |
| கூட்டுத்தொகை | 506 | 443 | 63 |

## 5. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுக் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக போதிய பதவியணி நியமிக்கப்பட்டிராததுடன் தலைமைக் காரியாலயத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உதவி உத்தியோகத்தர் பதவி உள்ளடங்கும் விதத்தில் பதவியணி அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டுத் தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும் இடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூவமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் காரணியாக பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகள் தொடர்பான நலிவுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்துக்கள்

(ஆ) முற்பணம்

(இ) வாடகைக்கிடல்

(ஈ) கணக்கீடு

(உ) மனித வள முகாமைத்துவம்